FIRST INFORMATION REPORT

(Under Section 173 BNSS)

முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8318748

1. District : மாவட்டம் **Thoothukudi** PS: காவல்நிலையம் **Vigilance and Anti-Corruption Thoothukudi** Year: ஆண்டு **2026** FIR No.: முத.அ. எண் **08/2026** Date: நாள் **28.08.2026**

2. (i) Act சட்டம்: **PC Act 1988 as Amended in 2018** Sections பிரிவுகள்: **7**

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் **On 27.08.2026** Date from : நாள் முதல் Date to : நாள் வரை

Time Period : நேர அளவு **Before 11.15 hrs** Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை

(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் **28.08.2026** Time : நேரம் **15.00 hrs**

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் **28.08.2026** Time : நேரம் **15.00 hrs**

4. Type of Information : Written/ Oral / Electronic form :
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் **கணினி தட்டச்சு மூலமாக**

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : முறைக் காவல் எண்

(b) Address : முகவரி **Govt. Fish Seed Rearing Centre Melakallamparai 30 Kms South**

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் **Tr.P.Suresh** (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் **Tr.Paulraj**

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : தொழில் Taluk Supply Officer (g) Address : முகவரி Taluk Office, Ottapidaram, Thoothukudi District.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr.U.Uthanduraman, aged 36/2026, S/o Tr.K.Udaiyar, Assistant Director of Fisheries, Thiruchendur, Thoothukudi District and one another.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் **No**

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

---

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு ----

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் ----

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed J.Anitha Rank Inspector of Police to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

28.8.2026

15 Date & Time of despatch to the court: **28.08.2026 at 17.00 hrs**
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் **S. PETER PAUL DURAI**
Rank: நிலை ..... No. எண் .....

Deputy Superintendent of Police
Vigilance And Anti Corruption
Thoothukkudi District
Thoothukkudi

Attachment to Column No.12 of First Information Report in Thoothukudi Vigilance and Anti-Corruption Cr.No.08/2026

பணிந்து அனுப்பப்படுகிறது.

1. Tr.U.Uthanduraman, aged 36/2026, S/o Tr.K.Udaiyar, Assistant Director of Fisheries, Thiruchendur, Thoothukudi District. 2. Tr.G.Seranthaiyaraja, aged 33/2026, S/o Tr.S.Gurusamy, Sub Inspector of Fisheries, O/o the Assistant Director of Fisheries and Fishermen Welfare, JD Fisheries Campus, Thoothukudi. OD at O/o the Assistant Director of Fisheries and Fisherment Welfare, Thiruchendur, Thoothukudi District.	தூத்துக்குடி மாவட்டம் ஏரல் தாலுகா, மேலக்கல்லாம்பாறையில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, கடம்பா, அரசு மீன் குஞ்சு வளர்ப்பு பண்ணை அலுவலகத்தில் உதவி இயக்குநர் மற்றும் மீன்துறை சார்ஆய்வாளர் ஆகியோர் கடம்பா குளத்தில் பங்கு மீன்பிடிப்பு முறையில் (பிடிக்கும் மீன்களில் ஒரு பகுதி அரசுக்கு ஒரு பகுதி மீனவருக்கு) மீன்

பிடிக்கவுள்ள மீனவர்களிடம் அரசுக்குள்ள பங்கு தொகை மற்றும் மீனவருக்குரிய பங்கு தொகை போக கூடுதலாக, முறைகேடாக பணம் கேட்டு பெற்று வருவதாக கிடைத்த இரகசிய தகவலின் பேரில், 27.08.2026-ம் தேதி நண்பகல் 11.15 மணி முதல் பிற்பகல் 15.45 மணி வரை துணை ஆய்வுக் குழு அலுவலர் நிலையில் திரு.ப.சுரேஷ், வட்ட வழங்கல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், ஓட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம் அவர்களுடன் கடம்பா, அரசு மீன் குஞ்சு வளர்ப்பு பண்ணை அலுவலகத்தில் நடத்திய திடீர் சோதனையின் அடிப்படையில் ஆய்வுக்குழு அலுவலர் நிலையில் திரு.ப.சுரேஷ், அவர்கள் கொடுத்த புகார் மனுவை 28.08.2026-ம் தேதி நான் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலக பணியில் இருந்தபோது பிற்பகல் 15.00 மணிக்கு பெற்று தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 08/2026, பிரிவு 7 of PC Act 1988 as Amended in 2018 –ன் படி மார்ஜினில் கண்ட எதிரிகளின் மீது வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு : அனுப்புநர் : திரு.ப.சுரேஷ், வட்ட வழங்கல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், ஓட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம். பெறுநர் : காவல் துணைக் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும்

கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி பிரிவு. அய்யா, பொருள் : திடீர் தணிக்கை செயல்முறைகள் - மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது தொடர்பாக. ****** தூத்துக்குடி மாவட்டம், ஏரல் தாலுகா, மேலக்கல்லாம்பாறையில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, கடம்பா, அரசு மீன் குஞ்சு வளர்ப்பு பண்ணை அலுவலகத்தை எனது தலைமையில் தூத்துக்குடி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு.பீட்டர்பால்துரை, காவல் ஆய்வாளர் திருமதி.V.அன்னலெட்சுமி, மற்றும் போலீஸ் பார்ட்டி உதவியுடன் 27.08.2026-ம் தேதி நண்பகல் 11.00 மணி முதல் 11.15 மணி வரை கண்காணித்ததில் உதவி இயக்குநர் மற்றும் மீன்துறை சார்ஆய்வாளர் ஆகியோர் கடம்பா குளத்தில் பங்கு மீன்பிடிப்பு முறையில் (பிடிக்கும் மீன்களில் ஒரு பகுதி அரசுக்கு ஒரு பகுதி மீனவருக்கு) மீன் பிடிக்கவுள்ள மீனவர்களிடம் அரசுக்குள்ள பங்கு தொகை மற்றும் மீனவருக்குரிய பங்கு தொகை போக கூடுதலாக, முறைகேடாக பணம் கேட்டு பெற்று வருவதற்கான முகாந்திரம் தெரிய வந்ததால் 27.08.2026-ம் தேதி நண்பகல் 11.15 மணி முதல் 15.45 மணி வரை மேற்படி அலுவலகத்தை திடீர் தணிக்கை செய்யப்பட்டது. மேற்படி தணிக்கையின் போது அந்த அலுவலகத்தில் இருக்கையில் அமர்ந்திருந்த திரு.உ.உத்தண்டுராமன், உதவி இயக்குநர், மீன்வளத்துறை, திருச்செந்தூர் என்பவரின் முன்பாக உள்ள மேஜையின் வலது பக்க டிராயரில் இரண்டு கட்டுகளாக காணப்பட்ட பணத்தை எடுத்து எண்ணிப் பார்த்த போது அதில் ரூ.1,51,500/- காணப்பட்டது. அது குறித்து உதவி இயக்குநர் திரு.உத்தண்டுராமன் மற்றும் அவருக்கு அருகில் நின்று கொண்டிருந்த மீன்வளத்துறை சார்ஆய்வாளர் திரு.கு.சேரந்தையராஜா ஆகியோர்களிடம் விளக்கம் கேட்ட போது அவர்களால் உரிய விளக்கம் அளிக்க இயலாமல் சந்தேகத்திற்கு இடமான வகையில் வைத்திருந்ததால் மேற்படி பணம் அவர்கள் லஞ்சமாக வசூல் செய்த பணம் என்று கருதி ரூ.1,51,500/-ம், மேலும், மீன்துறை சார் ஆய்வாளர் திரு.கு.சேரந்தையராஜா என்பவர் அந்த அறையில் இருந்த கப்போர்டில் இருந்து SEED STOCKING REGISTER என்று எழுதப்பட்ட பதிவேட்டினை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பதிவேட்டிற்குள் திரு.தாமஸ் என்பவரின் ஆதார் கார்டு நகல், ஒரு பாஸ்போர்ட் சைஸ் போட்டா மற்றும் பணம் ரூ.3,000/- ஆகியவையும் மடித்த நிலையில் காணப்பட்டது. அந்தப்பணம் ரூ.3,000/- குறித்து விளக்கம் கேட்க அவரால் உரிய

விளக்கம் அளிக்க இயலாமல் சந்தேகத்திற்கு இடமான வகையில் வைத்திருந்ததால் மேற்படி பணம் அவர் லஞ்சமாக வசூல் செய்த பணம் என்று கருதி **ரூ.3,000/-ம்,** மேலும், மீன்துறை சார்ஆய்வாளர் திரு.கு.சேரந்தையராஜா அவர்களை சோதனை செய்ய அவரது இடது பக்க சட்டை பாக்கெட்டில் ரூ.500/- நோட்டுக்கள் 4 எண்ணங்களாக பணம் ரூ.2,000/- காணப்பட்டது. அது குறித்து அவரிடம் விளக்கம் கேட்ட போது அதற்கு அவரால் சரியான முகாந்திரம் ஏதும் தெரிவிக்க இயலாததால் அந்தப்பணம் ரூ.2,000/- கையூட்டாக பெற்ற பணமாக இருக்கலாம் என்று கருதி **ரூ.2,000/-ம்** கைப்பற்றப்பட்டது. மேற்படி திடீர் தணிக்கையின் போது மொத்தம் (ரூ.1,51,500/- + ரூ.3,000/- + ரூ.2,000/- =) **ரூ.1,56,500/-ம்,** (1.) 34 விண்ணப்பங்கள், (2.) 7 விண்ணப்பங்கள், (3.) திரு.தாமஸ் என்பவரின் ஆதார் கார்டு நகல், (4.) ஒரு பாஸ்போர்ட் சைஸ் போட்டா, (5.) SEED SUPPLY REGISTER, (6.) கடம்பா குளம் அரசு மீன்குஞ்சு வளர்ப்பு பண்ணை தினக்கூலி பணியாளர் வருகை பதிவேடு, (7.)REGISTER OF GENERAL ATTENDANCE, (8.) பொது வருகைப்பதிவேடு என்று அச்சிடப்பட்ட மற்றொரு வருகைப்பதிவேடு, (9.) STAFF ATTENDANEC REGISTER, (10.) உதவி இயக்குநர் ந.க.எண்.1238/ஆ/2022, நாள்:17.08.2026 உதவி இயக்குநர் அலுவலகம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, திருச்செந்தூர் என்ற குறிப்பாணை நகல், (11.) CF-61-088201, கடம்பா அரசு மீன் பண்ணை மீன் விரலிகள் விற்பனை, 30/01/2026 என்று எழுதப்பட்ட இரசீது புத்தகம், (12.) 279901 to 279950, 11/05/2020, Fishing License என்று எழுதப்பட்ட இரசீது புத்தகம் மற்றும் (13.) 088251 - 300 என்று எழுதப்பட்ட இரசீது புத்தகம் ஆகியவை நேற்று 27.08.2026-ம் தேதி நண்பகல் 11.15 மணி முதல் பிற்பகல் 15.45 மணி வரை மணிவரை தயார் செய்யப்பட்ட செயல்முறைகள் மூலம் கைப்பற்றப்பட்டது. மேலும், மேற்படி சோதனையின்போது கடம்பா, அரசு மீன் குஞ்சு வளர்ப்பு பண்ணை அலுவலகத்தில் இருந்த உதவி இயக்குநர் திரு.உ.உத்தண்டுராமன், சார் ஆய்வாளர் திரு.கு.சேரந்தையராஜா ஆகியோர்களிடமும் மற்றும் அந்த அலுவலகத்தில் பணியில் இருந்தவர்களிடமும், மற்றும் சில தனி நபர்களிடமும் ஆகிய அனைவரிடமும் எனது முன்னிலையில் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டது. மேற்படி கைப்பற்றப்பட்ட பணம் **ரூ.1,56,500/-** மற்றும் செயல்முறையில் கைப்பற்றப்பட்ட ஆவணங்களை தங்களிடம் ஒப்படைத்து மீன்வளத்துறை

திருச்செந்தூர் உதவி இயக்குநர் திரு.உ.உத்தண்டுராமன் மற்றும் மீன்வளத்துறை சார் ஆய்வாளா திரு.கு.சேரந்தையராஜா ஆகியோர்கள் மீது சட்டப்படியான நடவடிக்கை எடுக்க கேட்டுக்கொள்கிறேன். Sd/- 28.08.2026 (ப.சுரேஷ்), வட்ட வழங்கல் அலுவலர், வட்டாட்சியர் அலுவலகம், ஓட்டப்பிடாரம், தூத்துக்குடி மாவட்டம். Sir, Received the complaint on today (28.08.2026) at 15.00 hrs and registering the complaint as Thoothukudi V&AC Cr.No.08/2026, U/s 7 of PC Act, 1988 as Amended in 2018. Sd/- 28.08.2026, S.Peter Paul Durai, Deputy. Supdt. of Police, V&AC, Thoothukudi Detachment. இதன் அசல் முதல் தகவல் அறிக்கை, திரு.ப.சுரேஷ் அவர்களின் அசல் புகார் மனு மற்றும் மேலக்கல்லாம்பாறையில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, கடம்பா, அரசு மீன் குஞ்சு வளர்ப்பு பண்ணை அலுவலகத்தில் வைத்து தயார் செய்யப்பட்ட செயல்முறைகள் ஆகியவற்றை இணைத்து மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி, தூத்துக்குடி அவர்களுக்கு அனுப்பியும் இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயரதிகாரிகளுக்கு அனுப்பியும் ஒரு நகலை வழக்கு விசாரணைக்காக திருமதி.J.அனிதா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, தூத்துக்குடி பிரிவு அவர்களிடம் ஒப்படைக்கிறேன்.

28.8.2026

Deputy Superintendent of Police
Vigilance And Anti Corruption
Thoothukkudi District
Thoothukkudi